Registered as a Newspaper பக்கங்கள் 04 விலை ரூபா 5-00

# ஈழநாதம்

THE EELANAATHAM மக்கள் தினசரி Peoples Daily

நாதம் 04 திருவள்ளுவர் ஆண்டு 2025 தை 16 (29-01-94) சனிக்கிழமை ஓசை 345

## "விடிவின் ராகங்கள்" ஒலி நாடா இன்று வெளியீட்டு விழா

தமிழீழ இசைக்குழு உருவாக்கிய 'விடிவின் ராகங்கள்' பாடல் ஒலிப்பதிவு நாடா வெளியீட்டு விழா இன்று மாலை 3-30 மணிக்கு யாழ். பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் தமிழீழ அரசியல் துறை துணைப் பொறுப்பாளர் திரு. சி. கரிகாலன் அவர்கள் தலைமையில் நடைபெறவுள்ளது. அதனைத் தொடர்ந்து மங்கள விளக்கு களை விடுதலைப்புலிகள் மகளிர் படையணித் தளபதி செல்வி விதுஷா அவர்களும், நிதர்சனம் பொறுப்பாளர் திரு. ஜவான் அவர்களும் ஏற்றி வைப்பார்கள். வரவேற்புரையை மட்டு - அம்பாறை கலை, பண்பாட்டுக் கழகத்தைச் சேர்ந்த ஈஸ்வரநாதன் அவர்கள் நிகழ்த்துவார்.

(4 ஆம் பக்கம் பார்க்க)

# வடக்கு - கிழக்கு நெருக்கடி

# இது ஒரு தேசியப் பிரச்சினை

## பாதுகாப்பு வலயத்துள் எறிகணைத் தாக்குதல்

(யாழ்ப்பாணம்)

நேற்று முன்தினம் இரவு மண்டைதீவுப் பகுதியில் இருந்து சிறிலங்கா படையினரால் யாழ் நகரை நோக்கி நடாத்தப்பட்ட எறிகணைத் தாக்குதலின் போது ஏவப்பட்ட எறிகணைஒன்று யாழ் போதனா வைத்தியசாலை பாதுகாப்பு வலயத்தினுள் உள்ள வீடொன்றின் மேல் விழுந்து வெடித்ததனால் அவ்வீடு பலத்த சேதம் அடைந்துள்ளது. ஏ. சுப்பிரமணியதாஸ் என்பவர் குடும்பத்தினருடன் நித்திரை செய்த அறையின் மேல் கூரையில் இந்த எறிகணை விழுந்து வெடித்ததனால் வீட்டின் ஒரு பகுதி சேதமாகியது. ஆயினும் எவரும் காயம் எதுவுமின்றி தெய்வாதீனமாக தப்பிக் கொண்டனர். அத்துடன் இவ்வீட்டின் அயலில் உள்ள வீடுகளின் கண்ணாடிகள் நொருங்கியுள்ளதோடு இப்பகுதியில் நின்ற தென்னை மரங்கள் சிலவும் சேதம் அடைந்துள்ளன. இதையடுத்து சர்வதேச

(4 ஆம் பக்கம் பார்க்க)

## இந்திய - சிறிலங்கா உடன்பாடே தீர்வு காமினி திசநாயக்கா 'இந்து'விற்கு பேட்டி

[கொழும்பு]

வடக்கு - கிழக்கில் இன்று நிலவுவது ஒரு தேசியப் பிரச்சினையே. பயங்கரவாதப் பிரச்சினை அல்ல. விடுதலைப் புலிகளின் கோரிக்கைகளை எந்தவொரு விதத்திலாவது நிறைவேற்றக் கூடிய தீர்வொன்று ஏற்படுத்தப்படவேண்டும். இதன் மூலம் மட்டுமே புலிகளின் தீவிரவாதப் போக்கை கைவிடச் செய்ய முடியும். சிறுபான்மையினரின் பிரச்சினைக்குத் தீர்வுகாண எம்மிடம் எஞ்சியுள்ளது இலங்கை-இந்திய ஒப்பந்தமே. இவ்வாறு ஐக்கிய தேசியக் கட்சியில் இணைந்து கொண்ட பின் இந்துப் பத்திரிகைக்கு வழங்கிய பேட்டி ஒன்றில் காமினி திசநாயக்கா கூறினார்.

அவர் அப்பேட்டியில் தெரிவித்துள்ளதாவது;

வடக்கு கிழக்கில் இன்று தேசிய பிரச்சினையே உள்ளது. இது பயங்கரவாதப் பிரச்சினையல்ல. சிறுபான்மையினரின் பிரச்சினைகளைத் தீர்க்க பெரும்பான்மை அரசாங்கங்கள் முன்வராமையினால் இப் பிரச்சினை எழுந்துள்ளது.

விடுதலைப்புலிகளால் நடத்திச்செல்லப்படும் இனரீதியான பிரிவினைப் போராட்டத்திற்கு முன்னணிக் காரணமாக அமைவது சிறிலங்காவின் சிறுபான்மையினர் தமது உரிமைகளையும், அவர்களின் சுதந்திரத்தையும் பெற முடியாத ஒரு நிலைக்கு தள்ளப்பட்டமையேயாகும்.

சிறுபான்மையினரின் அரசியல் மிக முக்கியமான ஒரு விடயம். இன்று உலகம் பூராவும் நடைபெறும் சம்பவங்கள் சிறுபான்மையினரின் பிரச்சினைகள் காரணமாக எழுந்துள்ளமையைக் காணக்கூடியதாக உள்ளது.

விடுதலைப்புலிகள் அமைப்பின் பக்கம் பார்க்கும்போது அவர்களது கோரிக்கைகளை எந்த ஒரு விதத்திலாவது நிறைவேற்றக்கூடிய தீர்வு ஒன்று ஏற்படுத்தப்படவேண்டும். இந்த நிலையில் மட்டுமே அவர்கள் தமது தீவிரவாதப்போக்கைக் கைவிட முடியும். அப்படியில்லாத

(4 ஆம் பக்கம் பார்க்க)



நேற்று இடம்பெற்ற சிங்கள மீனவர் விடுவிப்பு நிகழ்வில், காவல் துறைப் பொறுப்பாளர் பா. நடேசன், சர்வதேச செஞ்சிலுவைச் சங்கப் பிரதிநிதி செல்வி ஜோசப்பின் டோலி, விடுவிக்கப்பட்ட மீனவர் கபிரியேல் பெர்னாண்டோ ஆகியோரைப் படத்தில் காணலாம்.

## ஜனாதிபதியின் கருத்துக்கு முற்றிலும் மாறான கூற்று

### காமினியின் பேட்டி குறித்து விமர்சனம்

(கொழும்பு)

காமினி திசநாயக்கா தெரிவித்த கருத்து சிறிலங்கா ஜனாதிபதியின் கருத்திற்கு

அறுதியிட்டுக் கூறுகின்றார். மேலும் இந்த ஆண்டு முடிவதற்கு முன்னர் இப்பிரச்சினைக்குத் தீர்வு காணப்படும்

## தேர்தல் பிரசாரக் கூட்டம் 10 மணிக்குபின் நடத்ததடை

## தலைவர் பிரபாவின் பணிப்பில்

காமினி திசநாயக்கா தெரிவித்த கருத்து சிறிலங்கா ஜனாதிபதியின் கருத்திற்கு நேர் எதிரான கருத்து என அரசியல் அவதானிகள் கருதுகின்றனர்.

ஜனாதிபதி தற்போது நாட்டில்உள்ள பிரச்சினை பயங்கரவாதப் பிரச்சினை என மேலும் இந்த ஆண்டு முடிவதற்கு முன்னர் இப்பிரச்சினைக்குத் தீர்வு காணப்படும் என ஜனாதிபதி இந்த ஆண்டு வாழ்த்துச் செய்தியில் தெரிவித்துள்ளார் என அவ்அவதானிகள் சுட்டிக்காட்டுகின்றனர்,

## 10 மணிக்குபின் நடத்ததடை

(கொழும்பு)

தென்மாகாண சபையின் தேர்தல் பிரசார கூட்டங்களுக்கு இரவு 10 மணிக்குப் பின்னர் தடைவிதிக்கப்பட்ட போதும் அமைச்சர்கள் கலந்து கொள்ளும் கூட்டங்களுக்கு இதில் இருந்து விலக்கு அளிக்கப்படும் என காலி பிரதி பொலிஸ் மா அதிபர் தெரிவித்துள்ளார்.

தென்மாகாணசபைத் தேர்தலில் போட்டியிடும் அபேட்சகரை காலியில் சந்தித்த இவ் பொலிஸ் அதிகாரியான டி. ஐ. ஜீ. லோறன்ஸ்மேற்படிவேண்டுகோளை விடுத்துள்ளார். எனவே ஆளும் ஐக்கிய தேசியக் கட்சிக்கு மட்டுமே இரவின் எந்த நேரம் வரையும் கூட்டம் நடாத்த கூடியதாக இருக்கும் என எதிர்க் கட்சிகள் கவலை தெரிவித்தன.

## சிங்கள மீனவர் விடுதலை

(யாழ்ப்பாணம்)

தமிழீழ தேசியத் தலைவர் திரு. வே. பிரபாகரனின் விசேட பணிப்பின் பெயரில் தமிழீழ காவல்துறையின் பாதுகாப்பில் இருந்த சிங்கள மீனவர் ஒருவர் நேற்று விடுதலை செய்யப்பட்டார். கபிரியேல்பெர்னாண்டோ எனும் இவர் மனிதாபிமான அடிப்படையில் விடுதலை செய்யப்பட்டார்.

காவல்துறை பொறுப்பாளர் நடேசன் இச் சிங்கள மீனவரை சர்வதேச செஞ்சிலுவைச் சங்க பிரதி நிதியிடம் நேற்றுமாலை ஒப்படைத்தார். திருமலையைச் சேர்ந்த பெர்னாண்டோ கடந்த நவம்பரில் நாகர் கோயில் கரையோரமாக வைத்து காவல்துறையினரால் கைதாகியிருந்தார்.

# கொழும்பு அதிமேற்றாணியார் யுத்தக்கைதிகளைப் பார்வையிட்டார்

யாழ்ப்பாணம் வந்துள்ள கொழும்பு அதிமேற்றாணியார் அதி. வண. நிக்கலஸ் மார்க்கஸ் பெர்னான்டோ நேற்று புலிகளின் பாதுகாப்பில் உள்ள போர்க்கைதிகளை பார்வையிட்டார்.

நேற்றுக் காலை ஆயர் குழுவினர் போர்க்கைதிகளாக உள்ள சிங்களப் பொலிசார், பூநகரியில் கைதான இராணுவத்தினர், மற்றும் மூன்று சிங்கள மீனவர் ஆகியோரை பார்வையிட்டனர்.

யாழ். வைத்தியசாலையில் காயத்திற்கு சிகிச்சைபெறும் சிங்களப் படையினரையும் இக குழுவினர் பார்வையிட்டனர். யாழ்.மாநகர அலுவலகத்திற்கும் இவர்கள் விஜயம் செய்தனர்.

# வல்வெட்டித்துறை - பருத்தித்துறை கரையோரம் மீது பீரங்கித் தாக்கு

## ஒருவர் அதிர்ச்சி மரணம்; மூவர் காயம்

வடமராட்சி கடற்பரப்பில் ரோந்து சென்ற சிறிலங்கா கடற்படையினர் பருத்தித்துறை, வல்வெட்டித்துறை குடியிருப்புக்கள் மீது கண்மூடித்தனமான பயங்கரத் தாக்குதல்களை மேற்கொண்டனர்.

கடற்படையினரின் இத் தாக்குதலுக்கு இலக்காகி ஒரு வயோதிபர் அதிர்ச்சியால் மரணமானார். ஒரு யுவதி உட்பட மூவர் காயமடைந்தனர். பல வீடுகள் சேதமடைந்தன. பயன் தரும் மரங்கள்பல நாசமடைந்தன. பருத்தித்துறை துறைமுகப்

(4 ஆம் பக்கம் பார்க்க)

# புலிகளுடன் பேசியது பற்றி கொழும்பில் பேச்சு நடத்துவேன்

## இலங்கை துறவற சபைத் தலைவர்

(யாழ்ப்பாணம்)

புலிகளுடன் பேசிய விடயங்கள் தொடர்பாகவும் தமிழ் மக்கள் துயரங்கள் பற்றியும் கொழும்பிலுள்ளவர்களுடன் பேச்சு நடத்தவுள்ளதாக இலங்கை துறவற சபை தலைவர் அருட்திரு அல்பிரட் அலெக்ஸ்சாண்டர் புலிகளின் குரலுக்கு தெரிவித்தார். நேற்று முன்தினம் ஆயர் குழு புலிகளுடன் நடத்திய பேச்சு குறித்து கருத்து வெளியிடுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

முக்கிய விடயங்கள் தொடர்பாக கொழும்பில் சம்பந்தப்பட்டவர்களுடன் பேசவுள்ளோம். எமது முயற்சியின் வெற்றிபற்றிய சாத்தியக்கூறு அதன்பின்பே தெரியும். உகந்த சூழ்நிலை தோன்றினால் யாழ். விஜயங்கள் தொடரலாம் எனவும் அவர் குறிப்பிட்டார்.

ஆயர் நிக்கலஸ் மார்க்கஸ் பெர்னாண்டோ, திருமலை-மட்டக்களப்பு ஆயர் கிங்ஸ்லி சுவாம்பிள்ளை, துறவறச்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## தென் மாகாணசபை தேர்தல் மார்ச் 24இல்

தென்மாகாணசபைத் தேர்தல் மார்ச் 24 ஆம் திகதி நடைபெறும். 13 இலட்சம் வாக்காளர்கள் 53 உறுப்பினர்களை தெரிவுசெய்யவுள்ளனர். 228 வேட்பாளர்கள் போட்டியிடுகின்றனர். தென் மாகாணசபை அண்மையில் கலைக்கப்பட்டது தெரிந்ததே.

## அரச செலவுகளை குறைக்க ஐ. எம். எவ். வற்புறுத்து

(கொழும்பு)

சிறிலங்கா அரசு தனது செலவுகளை கடுமையாகக் குறைத்தாலே தொடர்ந்து நிதியுதவி மேற்கொள்ள முடியும் என சர்வதேச நாணய நிதியம் வற்புறுத்தியுள்ளது. உலக வங்கி பணிப்பின் பேரில் ஐ.எம்.எவ். இவ்வாறு அறிவுறுத்தியுள்ளது.

அரசின் செலவு குறைக்கப்படாவிட்டால் வரவு - செலவு பற்றாக்குறைக்கு மேலதிக நிதி வழங்க முடியாது எனவும் ஐ. எம். எவ். கூறியுள்ளது.

இதே சமயம் ஐ. எம். எவ். குழுவொன்று கொழும்பு வந்துள்ளது. இது கிழக்கில் நடைபெறவுள்ள உள்ளூராட்சி தேர்தல் பற்றியும் பொதுத் தேர்தல் நடத்தப்படுவது பற்றியும் விசாரிக்க வந்துள்ள

(4 ஆம் பக்கம் பார்க்க)

## குண்டு வெடிப்பினால் ஒன்பது சிப்பாய்கள் காயம்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள கதிரவெளி சிறிலங்கா இராணுவ முகாமில் ஏற்பட்ட குண்டு வெடிப்புக் காரணமாக ஒன்பது சிப்பாய்கள்படுகாயமடைந்துள்ளனர்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை மேற்படி முகாமில் உள்ள வெடிகுண்டுக் களஞ்சியத்தில் இருந்த குண்டு ஒன்றே வெடித்தது. இதன்போது இச் சிப்பாய்கள் காயமடைந்ததாக தெரியவருகிறது. குண்டு வெடிப்புக்குரிய காரணம் குறித்து தகவல்கள் எதுவும் கிடைக்கவில்லை.

## செஞ்சிலுவைச் சங்க அதிகாரி

## பாதுகாப்பு வலயம் குறித்து ஜனாதிபதியை சந்திப்பார்

யாழ். போதனா வைத்தியசாலை பாதுகாப்பு வலயம் குறித்து புலிகளுடன் பேச்சு நடத்திவிட்டு சென்ற சர்வதேச செஞ்சிலுவை சங்கத்தின் ஆசிய விவகார துணை பிரதிநிதி அடுத்தவாரம் ஜனாதிபதி விஜேதுங்காவையும் படை உயர் அதிகாரிகளையும் சந்தித்து பேசவுள்ளார்.

இதைத் தொடர்ந்து மூன்றாம் திகதி அவர் ஜெனிவா செல்வார்.

## அங்கிலிக்கன் ஆயர் கிளிநொச்சி விஜயம்

அங்கிலிக்கன் ஆயர் அதி வண. கெனத் பெர்னாண்டோ தலைமையிலான குழுவினர் பெப்ரவரி 2ஆம் திகதி கிளிநொச்சி வரவுள்ளனர். இவருடன் மனைவி சித்ரா பெர்னாண்டோ, அருட் கலாநிதி ரியன்சி பெரேரா, யாழ். மறை மாவட்ட நிர்வாகி டொனால் கனகரட்னம் ஆகியோரும் வருவர்.

இக்குழுவினர் தண்ணீரூற்று, தர்மபுரம், பகுதிகளுக்கும் செல்வர். ஐந்தாம் திகதியளவில் குழுவினர்யாழ். வருவர். 14 ஆம் திகதிவரை இவர்கள் இங்கு தங்கியிருப்பர். ஆயர் கெனத் பெர்னாண்டோவின் இரண்டாவது யாழ். விஜஉம் இதுவாகும்.

## கடலில் வந்த பொருள் வெடித்ததில் இருவர் காயம்

(யாழ்ப்பாணம்)

கடலில் மிதந்துவந்த பொருள் ஒன்றை எடுத்து குப்பி விளக்கில் கொளுத்திப் பார்த்தபோது அது வெடித்து சிறுவனும், தாயாரும் காயமடைந்தனர்.

குறிப்பிட்ட சிறுவனின் பாடசாலை நண்பன் கொடுத்த பொருளை நேற்றிரவு வீட்டில் படித்துக்கொண்டிருந்த போது அச்சிறுவன் விளக்கில் கொளுத்திப் பரீட்சித்துப் பார்த்திருக்கிறார்.

இவ் வேளை திடீர் என்று

(4 ஆம் பக்கம் பார்க்க)

## வரி விளம்பரம்

### விற்பனைக்குண்டு

யாழ்ப்பாண சமூகத்தை விளங்கிக்கொள்ளல் தமிழ் கற்பித்தலில் உன்னதம் ஆசிரியர் பங்கு பேராசிரியர் - கா. சிவத்தம்பி விற்பனையாகிறது. பூபாலசிங்கம் புத்தக சாலை யாழ்ப்பாணம்.

(ஜி-8408)

### ஸ்ரீலங்கா அச்சகம்

ராஜா தியேட்டர் அருகாமையில் அமைந்திருப்பதே மக்கள் அபிமானம் பெற்ற ஸ்ரீலங்கா அச்சகம், உங்கள் பிரசுர வேலைகளுக்கு எமது அச்சக லேனைப் பாவியுங்கள்.

(7308)

### விற்பனைக்கு

மாணவர்க்கேற்ற மாண்புறு கதைகள் எழுதியவர் ஆத்மஜோதி நா.முத்தையா அவர்கள். விலை ரூபா 27/50 மட்டுமே.

(7349)

### மூக்குக்கண்ணாடி

உங்கள் கண்களுக்கும் முகங்களுக்கும் ஏற்ற டாக்டர்களின் மருந்து சிட்டைக்கமைய மூக்குக்கண்ணாடிகளை தாமதம் எதுவுமில்லாமல் பெற்றுக்கொள்ள நாடுங்கள், முப்பது வருடங்களுக்கு மேற்பட்ட சேவையில் இன்றும்- மொறாயஸ் 50, மணிக்கூட்டு வீதி, வெலிங்டன்சந்தி யாழ்ப்பாணம்.

(சி-8274)

### "காலங்கள்" நூல் வெளியீடு

சாந்தன் எழுதியுள்ள 'காலங்கள்' சிறுகதைத் தொகுதி நூலின் வெளியீட்டு அரங்கு நாளை மறுதினம் திங்கட்கிழமை பிற்பகல் நான்கு மணியளவில் யாழ்ப்பாணபல்கலைக்கழககைலாசபதி கலையரங்கில் நடைபெறவுள்ளது. கவிஞர் புதுவை இரத்தினதுரை தலைமையில் நடைபெறவிருக்கும் இவ் வெளியீட்டு அரங்கில் டானியல் அன்ரனி வெளியீட்டு உரை நிகழ்த்த மூத்த எழுத்தாளர் வரதர் முதற் பிரதியைப் பெற்றுக்கொள்ளவுள்ளார். கவிஞர் சோ. பத்மநாதன், செல்வி ப. நாமகள், கலாநிதி நா. சுப்பிரமணியன் ஆகியோர் மதிப்புரைகளை ஆற்றவுள்ளனர்.

## 'இசைப்பேரறிஞர்' விருது



சங்கீத பூஷணம்
வீ. கே. குமாரசாமி

அகில இலங்கைக் கம்பன் கழகம் இவ்வாண்டுக்கான 'இசைப் பேரறிஞர்' விருதுக்குரியவராக 'சங்கீத பூஷணம்' திரு. வீ.கே. குமாரசாமியைத் தெரிவு செய்துள்ளது.

திரு. வீ. கே. குமாரசாமி 1925ஆம் ஆண்டு மார்ச் மாதம் 9ஆந் திகதி கரம்பன் மேற்கு, ஊர்காவற்றுறையில் கோவிலாம்பிள்ளை-வள்ளியம்மை தம்பதியரின் மூத்த புதல்வராய்ப் பிறந்தார்.

ஊர்காவற்றுறை புனித அந்தோனியார் கல்லூரியில் நூற்கல்வியைக் கற்ற இவர், தன் இசைப்பயிற்சியில் தனது மாமனாரான கா. வைத்திலிங்கம் அவர்களை ஆரம்ப குருவாகக்கொண்டார். 1940ஆம் ஆண்டு இந்தியா சென்று ஸ்ரீவில்லிபுத்தூர் அருகிலுள்ள வத்தராயிருப்பு எனும் கிராமத்தில் தோடி சாமா ஐயங்கார் அவர்களிடம் ஓராண்டு வாய்ப்பாட்டினைக் கற்று,பின் சங்கீத கலாநிதி கும்பகோணம் ராஜமாணிக்கம்பிள்ளை அவர்களிடம் 5 ஆண்டுகள் வயலின் கற்றார். அதன்பின் 1945-ம் ஆண்டில் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் சேர்ந்து 1948ஆம் ஆண்டு 'சங்கீத பூஷணம்' பட்டம்பெற்றார்.

தற்பொழுது யாழ். பல்கலைக்கழக நுண்கலைப்பீடத்தில் போதனாசிரியராகக் கடமையாற்றும் இவர் ஐம்பது ஆண்டுகளுக்கு மேல் இசைத்துறையில் ஈடுபட்டு, சுமார் ஐயாயிரம் கச்சேரிகளுக்கு மேல் செய்து முடித்துள்ளார். இதில் தமிழகத்தில் இருந்துவந்த பல முன்னணி வித்துவான்களுக்கும், ஈழத்தின் புகழ் பெற்ற வித்துவான்கள் பலருக்கும் பக்க வாத்தியம் வாசித்துப் பாராட்டைப் பெற்றவராவார்.

### பிற்போடப்பட்டுள்ளது

கொடிகாமம் திருநாவுக்கரசு ம. வி.இன் அபிவிருத்தி நிதிக்காக வித்தியாலய பழைய மாணவர் சங்கத்தால் இன்று (29-1-94) நடத்தப்பட இருந்த ''மாபெரும் கலைவிழா'' தவிர்க்க முடியாத காரணத்தால் பிற்போடப்பட்டுள்ளது. நடாத்தப்படும் திகதி பின்னர் அறிவிக்கப்படும்.

பழைய மாணவர் சங்கம்
கொடிகாமம் திருநாவுக்கரசு ம. வி.

(7353)

### முக்கிய அறிவித்தல்

இறைச்சிப் பாவனையாளர்களுக்கு, கொக்குவில் பிறவுண் வீதியில் அமைந்துள்ள மாட்டிறைச்சிக் கடையில் சுகாதார உணவுப்பரிசோதகரினால் பரிசோதித்து முத்திரையிட்ட மாட்டிறைச்சி 29-01-94 சனிக்கிழமை தொடக்கம் 1 கிலோ மாட்டிறைச்சி 80/- ரூபாய்க்கு விற்கப்படும் என்பதை பாவனையாளர்களுக்கு அறியத்தருகின்றோம்.

உரிமையாளர்.
அலியார் அபுதாகீர்

பிறவுண் வீதி,
பிரதேசசபை உப அலுவலகம்,
கொக்குவில்

(7354)

### ஈழநாதம் 4ஆம் ஆண்டு நிறைவுப் போட்டி

சிறுகதை, கவிதை,
மாணவர்களுக்கான கட்டுரை

முதலாம் பரிசு: தங்கப்பதக்கத்துடன் கூடிய 1500 ரூபா ரொக்கப் பணம்.
இரண்டாம் பரிசு: 1500 ரூபா ரொக்கப் பணம்.
மூன்றாம் பரிசு 1000 ரூபா ரொக்கப் பணம்.

போட்டியில் பங்குபற்றி பரிசில்களை வெல்லுங்கள்

முடிவுத்திகதி : **31-01-1994**

### ஓம் விராட்விஸ்வப் பிரமனே நம
### 31-ம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



இராமலிங்கம் ஆறுமுகப்பத்தர்

தோற்றம்: 11. 9. 1935 மறைவு: 30. 12. 1993

எங்கள் குடும்பத்தின் ஒளிச்சுடராகவும் எமக்கும் மற்றையோருக்கும் வழிகாட்டியாகவும் எல்லோரின் நன்மதிப்புக்குரியவராகவும் விளங்கிய எங்கள் அன்புத் தெய்வமே!

உங்கள் நினைவலைகள் என்றென்றும் எங்கள் நெஞ்சத்தில் நிலைத்திருக்கும். உங்கள் ஆத்மா சாந்தி அடைய இறைவனைப்பிரார்த்திக்கிறோம்.அன்னாரின் வீட்டுக் கிரியைகள் இன்று 29-1-1994 சனிக்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெறும். இவ் வைபவத்தில் உற்றார், உறவினர்கள், நண்பர்களைக் கலந்து கொள்ளுமாறு அன்புடன் வேண்டிக்கொள்கின்றோம்.

மனைவி, பிள்ளைகள்

இத்தியடிப் பிள்ளையார் கோவிலடி,
சங்கத்தானை சாவகச்சேரி.

(7355)

### எமது நேற்றைய வெளியீடுகள்

1. பாக்கியராஜின்_ வீட்ல விசேஷங்க
2. பிரபு - மீனா - நதியா... ராஜகுமாரன்
3. சத்தியராஜ் - கஸ்தூரி அமைதிப்படை
4. விஜயகாந் - மீனா... சேதுபதி I. P. S.

குறிப்பு. அனைத்தும் கொழும்பு மாஸ்டர் பிரதிகள்.

வீடியோ விமல்
117, மானிப்பாய் வீதி,
ஐந்துசந்தி, யாழ்ப்பாணம்.

(சி-8473)

### 2-ம் ஆண்டு நினைவஞ்சலி



வீரவேங்கை சிவராம் கலைவேந்தன்
(வ. குணதீஸ்வரன் - குணம்)
கொக்குவில் இந்துக்கல்லூரி பழைய மாணவன்

திதி: 29-01-1994

அன்புப் புத்திரனாய்; 03-.2 1973
மண்ணின் மாவீரனாய்: 21-01-1992

மண்ணை நீர் நேசித்ததால்
மரணத்தை நீங்கள் ஏற்றுக் கொண்டீர்
ஓ வீரனே
எம் இதய பூமியில்
நீ வீழ்ந்து விட்டாய்
இல்லை
வீர காவிய நாயகனில் ஒருவனாகி விட்டாய்.

ஆடியபாதம் வீதி,
கொக்குவில் மேற்கு,

தாய், சகோதரர்கள்,
உறவினர்கள் மற்றும்

நாமகள், கலாநிதி நா. சுப்பிரமணியன் ஆகியோர் மதிப்புரைகளை ஆற்றவுள்ளனர்.

## உதைபந்தாட்டம்

கலைவாணி விளையாட்டுக் கழகம் நடாத்தும் ஒன்பது பேர் கொண்ட உதைபந்தாட்ட சுற்றுப் போட்டி இன்று பிற்பகலில் உரும்பராய் இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது. இப் போட்டியில் றோயல் அணியை எதிர்த்து கோல்ஸ்டார் அணியும், றிங்கோஸ்ரார் அணியை எதிர்த்து, ஒஸ்கா அணியும் விளையாடவுள்ளன. மேலும் இதே இடத்தில் நாளை பிற்பகலில் கலைவாணி அணியை எதிர்த்து வயவை அணியும், ஞானமுருகன் அணியை எதிர்த்து றிங்கோ ஸ்ரார் அணியும் விளையாடவுள்ளன.

## உருவப்படம் திரைநீக்கம்

இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின் யாழ்ப்பாணக் கிளைத் தலைமை அலுவலகத்தில் இன்று காலை ஒன்பது மணியளவில் முன்னாள் தலைவர்கள், போஷகர்கள் ஆகியோரின் உருவப்படத் திரைநீக்கமும், 94-ம் ஆண்டிற்கான பயிற்சிநெறி ஆரம்பமும், 93 டிசம்பர் மாதத்திற்கான சஞ்சிகை வெளியீடும் நடைபெறவுள்ளது.

## மீட்டல் வகுப்புக்கு வெளிச்ச வசதி

(தொல்புரம்)

வட்டுக்கோட்டை வாழ் மாணவர் கல்வி வசதி நலன் கருதி தமிழீழ விடுதலைப்புலிகள மாணவர் அமைப்பினால் இரவு நேர மீட்டல் (சுய கல்வி) வகுப்புகள் நடாத்தப்படுகின்றன.

வட்டுக்கோட்டை துணைவி அ.மி.த.க. பாடசாலை மண்டபத்தில் பெற்றோமாக்ஸ் லாம்பு வெளிச்ச வசதியுடன் நடாத்தப்படும் மேற்படி இரவு நேர வகுப்புகளில் பல மாணவ, மாணவியர் பங்குபற்றி பயனடைந்து வருகின்றனர். (41)

கொக்குவில் (7354)

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

பின்வரும் பதவிக்குப் பொருத்தமான விண்ணப்பதாரிகளிடமிருந்து விண்ணப்பங்கள் 1994-02-28ஆம் திகதி வரை என்னால் பெற்றுக்கொள்ளப்படும்.

தற்காலிக போதனாசிரியர் (கணனிப்பகுதி).

சம்பள அளவுத்திட்டம்

தற்காலிக போதனாசிரியர் (கணனிப்பகுதி) - ரூபா 4,420|- (நிலையானது- மாதமொன்றிற்கு)

(பரீட்சை பெறுபேறுகளுக்காகக் காத்திருப்போருக்கு அவர்களின் பெறுபேறுகள் வெளியிடப்படும் வரை 4,100|- (நிலையானது) மாதச் சம்பளத்தில் வைக்கப்படுவர்.)

தகைமைகள்:

பட்டதாரி அல்லது பட்ட இறுதித்தேர்வுக்குத் தோற்றிப் பெறுபேறுகளுக்காகக் காத்திருப்பவர்.

இத்துடன் நிலுவையிலுள்ள வேலை நிறைவேற்றப்படியாக 1994 திசெம்பர் 31ஆம் திகதி வரை சம்பளத்தின் 25 சதவீதத்திற்கு சமமான தொகை செலுத்தப்படும்.

1993 மே 12ஆம் தேதிய 9|93 இலக்க பொது நிருவாகச் சுற்றறிக்கையின் ஏற்பாடுகளுக்கு ஏற்ப மாதாந்தப்படியாக 600|-ரூபா செலுத்தப்படும்.

ஒவ்வொரு விண்ணப்பப் படிவத்திற்கும் 20|-ரூபாவை பல்கலைக்கழகத்திலுள்ள மக்கள் வங்கிக் கிளையில் அல்லது நிதிக்கிளையில்செலுத்தி இப்பல்கலைக்கழகததின் சிரேட்ட உதவிப் பதிவாளர் (தாபனக்கிளை) அலுவலகத்தில் பெறக்கூடிய படிவங்களில்செய்யப்படல் வேண்டும். தபால் மூலம் படிவங்களையும் விபரங்களையும் பெற்றுக்கொள்ள விரும்புவோர் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக நிதியாளரின்பெயரில் பெறப்பட்ட 20|-ரூபாபெறுமதியான காசுக்கட்டளை| தபாற்கட்டளை உடன் 23X10 ச. மீ அளவுடைய சுயமுகவரியிட்டு முத்திரையொட்டப்பட்ட கடித உறையை அனுப்புதல் வேண்டும் விதிக்கப்பட்ட படிவங்களில். அனுப்பப்படும் விண்ணப்பம் மாத்திரமேஏற்றுக் கொள்ளப்படும்.

அரசாங்க திணைக்களங்கள், அரச கூட்டுத்தாபனங்கள், நியதிச் சட்டசபைகள் ஆகியவற்றின் விண்ணப்பதாரிகள் தமது நிறுவனங்களின் தலைவர்களினூடாக விண்ணப்பித்தல் வேண்டும்.

**பதிவாளர்.**
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்,
திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்.
1994-01-26

(கி-8474)

மனைவி, பிள்ளைகள்
இத்தியடிப் பிள்ளையார் கோவிலடி,
சங்கத்தானை சாவகச்சேரி. (7355)

## 31-ம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



தோற்றம்:
வசாவிளான்
07.04.1922

மறைவு:
உரும்பராய்
30.12.1993

கொல்லங்கலட்டி காலஞ்சென்ற விசுவநாதர் தியாகராசா (இளைப்பாறிய பிரதம லிகிதர் சுகாதார திணைக்களம், கொழும்பு) அவர்களின் அன்பு மனைவி

### வசாவிளான் தெற்கு, திருமதி சிவகாமிப்பிள்ளை தியாகராசா

(ஆசை அக்கா)

30-12-1993 சிவபதம் அடைந்த எமது தாயாரின் இறுதிக் கிரியைகளில் கலந்துகொண்ட உற்றார், உறவினர், நண்பர்களுக்கும் வேண்டிய நேரத்தில் வேண்டிய உதவிகள் புரிந்த அனைவருக்கும் எமது உள்ளங்கனிந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

29-01-1994 இன்று அன்னாரின் இல்லத்தில் சபிண்டீகரண அந்தியேட்டி நிகழ்வு நடைபெற இருப்பதால் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கிறோம்.

உங்கள் பிரிவால் துயருறும்

பிள்ளைகள்: வைத்தியகலாநிதி தி. அருந்தவராணி (அமெரிக்கா),
திருமதி சிவஞானம் செல்வராணி (லண்டன்)
கலாநிதி தி, குலத்தவராணி (கனடா)
செல்வி தி. பவளராணி,
செல்வன் தி. யோகராஜா, (கொழும்பு),
மருமகன்: பொறியியலாளர் ந. சிவஞானம் (லண்டன்)
பேரப்பிள்ளைகள்: செல்வி சி. பிரியா (லண்டன்)
செல்வன் சி. பிரலாதன் (லண்டன்).

காளிகோவிலடி,
சிவன் வீதி,
உரும்பராய்.

(7241)

ஆடியபாதம் வீதி,
கொக்குவில் மேற்கு,
கொக்குவில். (7286)

தாய், சகோதரர்கள்,
உறவினர்கள் மற்றும்
நண்பர்கள்.

## நினைவு கூருகின்றோம்...

## 1994-01-29

1986ஆம் ஆண்டு இதே தினத்தில் வீரச்சாவெய்திய -

❁ **மணி** (ஆசீர்வாதம் அருளப்பு - மூதூர் - திருகோணமலை)

மன்னார் பரப்புக்கடந்தான் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினருடனான நேரடிச் சமரில் வீரச்சாவெய்திய -

**லெப். உமாகாந்** (பர்ணாந்து நீக்கிலாஸ், காத்தான்குளம் - மன்னார்)

1987ஆம் ஆண்டு யாழ் - பருத்தித்துறைப் பகுதியில் மிதிவெடியில் சிக்கியதில் வீரச்சாவெய்திய -

**பவுண்** (மாணிக்கம் குணசிங்கம் - இமையாணன் மேற்கு, நாவலடி, உடுப்பிட்டி - யாழ்)

1989ஆம் ஆண்டு மணலாறு - அளம்பில் பகுதியில் இந்தியப் படையினரால் சுட்டுக் கொல்லப்பட்ட முல்லைத்தீவு, தங்கபுரத்தைச் சேர்ந்த தமிழிளைஞன்.

1991ஆம் ஆண்டு மணலாறு - முந்திரிகைக்குளம் முகாமிலிருந்து சாம்பன்குளம் முகாமிறகுச் சென்றுகொண்டிருந்த சிறிலங்கா இராணுவத்தினருடன் ஏற்பட்ட சமரில் வீரச்சாவெய்திய -

**2-ம் லெப். முரளி** (பாலசுப்பிரமணியம் செல்வகுமார் - உப்புவெளி - திருகோணமலை)

**சபேசன்** (விக்கினேஸ்வரன் முகுந்தன் - மயிலியதனை, தொண்டமானாறு - யாழ்)

மட்டக்களப்பில் சிறிலங்கா இராணுவத்தினரால் சுட்டுக் கொல்லப்பட்ட ஏறாவூர், ஆறுமுகத்தான் குடியிருப்பைச் சேர்ந்த தமிழ்ப பொதுமகன். தேசவிரோதக் குழுவினரால் சுட்டுக் கொல்லப்பட்ட லூர்த்து வீதியைச் சேர்ந்த தமிழ்ப்பொதுமகன்.

**ஆகியோரை இந்நாளில் நினைவு கூருகின்றோம்.**

❁ இச்குறியிடப்பட்டுள்ள மாவீரர் ஈரோஸ் அமைப்பு இயங்கிய காலத்தில் அதனுடன்இணைந்து செயற்பட்டவராவர்.

**தமிழீழ விடுதலைப் புலிகள்.**

(கி-8472)

யாழ்ப்பாணம்

**சிந்தனைக்கு**

வெளிப்படையான போரை விட, வஞ்சகமான சமாதானம் பெருங்கேடு விளைவிக்கும்.

டேஸிட்டஸ்

ஈழநாதம்

31, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம் 29-01-1994
தொலைபேசி
ஆசிரியபீடம் 025 - 2839 நிர்வாக பீடம் 2023
தபால் பெட்டி எண் 05

# ரணிலின் கோரிக்கையில் நியாயமில்லை

சமாதான முயற்சிகளின் முதற்கட்ட நடவடிக்கையாக விடுதலைப் புலிகள் இயக்கம் யுத்தக் கைதிகளாகப் பிடித்து வைத்திருக்கும் இராணுவச் சிப்பாய்களையும், பொலிசாரையும் விடுதலை செய்ய வேண்டும் என்ற சிறிலங்கா பிரதம மந்திரி ரணில் விக்கிரமசிங்காவின் கோரிக்கையானது அடிப்படையில் நியாயம் எதுவும் இல்லாதது என்பதோடு, ஏமாற்றுவதற்கான தந்திரமான நடவடிக்கையா என்றசந்தேகத்தையும் எழவைக்கின்றது.

இனப்பிரச்சினைக்கு சமாதான வழியிலான அரசியற் தீர்வு காண்பதற்கு எப்பொழுதும் தாம் தயாராகவே உள்ளதாக விடுதலைப் புலிகள் இயக்கம் பல தடவை அறிவித்திருந்தது. அதற்கு ஏற்றாற்போல், நல்லெண்ணச் சூழ்நிலையை உருவாக்கும் முயற்சியாக சில நடவடிக்கைகளையும் மேற்கொண்டிருந்தது. இதன் ஒரு கட்டமாகவே கடந்த வருட ஆரம்பத்தில் யாழ்ப்பாணம் வந்திருந்த அங்கிலிக்கன் ஆயர் கெனத் பெர்னாண்டோவின் கோரிக்கைக்கு இணங்க யுத்தக் கைதிகள் இருவரை விடுதலை செய்தது.

ஆனால், அரசாங்கம் இந்நல்லெண்ண முயற்சிக்கு மதிப்பளிக்கவில்லை. அதன் பின்னரும் கூட போர்க் கைதிகளின் உண்ணாவிரதத்தைத் தொடர்ந்து ஏற்பட்ட பேச்சு வார்த்தைகளின் பின் நல்லெண்ணச் சூழலை உருவாக்கும் நோக்கில் ஐந்து போர்க் கைதிகளை விடுதலைப் புலிகள் விடுதலை செய்தனர். ஆனால், உருவாகி வந்த நல்லெண்ணச் சூழலை அரசாங்கமே குழப்பி அடித்தது; உடன்பாட்டை முறித்துக் கொண்டது.

இந்நிலையில், மீண்டும் போர்க் கைதிகளை விடுதலை செய்து நல்லெண்ணச் சூழ்நிலையை விடுதலைப் புலிகள் உருவாக்க வேண்டும் எனப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கா கோருவதில் அர்த்தமில்லை. விடுதலைப் புலிகள் நல்லெண்ணச் சூழ்நிலையை உருவாக்க எடுத்த முயற்சிகள் அரசாங்கத்தினால் கடந்த காலத்தில் குழப்பி அடிக்கப்பட்டமையால் தற்பொழுது நல்லெண்ணச்சூழ்நிலையை உருவாக்குவது அரசாங்கத்தின் கைகளிலேயே உள்ளது; அதாவது பந்து அரசின் பக்கமே உள்ளது,

சிறிலங்கா அரசாங்கம் இனப்பிரச்சினை தொடர்பாக குழப்பமான ஒரு நிலைப்பாட்டைக் கொண்டுள்

# இரவல் தளபாடங்களுடன் இயங்கும் பிரதேச செயலகங்கள்

யாழ். குடாநாட்டிலும்தற்போது ஏனைய பகுதிகளில் மேற்கொள்ளப்படுவது போன்று அரச நிர்வாகத்தில் சில அதிகாரங்கள் பரவலாக்கப்பட்டு வருகிறது. இவ்வாறு நிர்வாகத்தை விரிவுபடுத்துவதினாலும் நிர்வாக அதிகாரத்தை பரவலாக்குவதினாலும் கணிசமான அனுகூலங்கள் ஏற்படுகின்றபோதிலும் தற்போதைய சூழலில் பல பிரதிகூலமான விளைவுகளையும் நேரடியாக அவதானிக்கக் கூடியதாக உள்ளது.

மேற்படி அதிகாரப்பரவலாக்கல் திட்டத்தின்படி குடாநாட்டில் உள்ள ஒவ்வொரு பிரதேசசெயலாளர் பிரிவு அலுவலகங்களும் அப்பகுதி மக்களின் தேவைகளுக்காக 'மினிக்கச்சேரி'களாகஇயங்க வேண்டும்.

தற்போதைய நிலையில் மேற்படி நிர்வாக கட்டமைப்பையும் செயற்பாடுகளையும் அவதானிப்பதற்காக எமது செய்தியாளர்கள் வடமராட்சியில் உள்ள இரு பிரதேச செயலகங்களுக்கு நேரடியாக சென்றனர்.

கரவெட்டி பிரதேச செயலகத்தில் பிரதேச செயலாளர் திரு. செ. சிறினிவாசன் அவர்களைச் சந்தித்து உரையாடிய போது மேற்படி அதிகாரப் பரவலாக்கலும் அது தொடர்பான பல நடைமுறைப் பிரச்சினைகளையும் தெரிந்துகொள்ளமுடிந்தது.

''இன்றைய சூழலில் இங்கு புதிய நிர்வாகக்கட்டமைப்பு வரவேற்கக் கூடிய ஒன்று. ஆனால்முழுமையான அதிகாரப் பரவலாக்கல் மேற்கொள்ளப்பட வேண்டும் அல்லது முன்பு இருந்தது போல கச்சேரியிடம் அதிகாரங்கள் இருக்க வேண்டும்'' இது திரு. சிறினிவாசனின் கருத்து. தற்போது அரைகுறையான அதிகாரங்கள் மட்டுமே தம்மிடம் இருப்பதாகவும் இதனால் நிர்வாக ரீதியாகவும் பொதுமக்கள் மத்தியிலும் குழப்பம் நிலவி வருவதாகவும் இவர் கருதுகிறார்.

உத்தேச திட்டப்படி முழுமையான அதிகாரங்கள் எதுவும் இவரது கைகளுக்கு இதுவரை கிடைக்கவில்லை. அத்துடன் அத்தகைய நிர்வாகக் கட்டமைப்பை பேணுவதற்கு தேவையான ஊழியர்களில் ஒரு சிறு பகுதியினரே இவ் அலுவலகத்திற்கு நியமிக்கப்பட்டுள்ளனர். எனினும் இவ் ஊழியர்கள் கடமையாற்றுவதற்குத் தேவையான தளபாடங்கள் எதுவும் வழங்கப்படவில்லை. அலுவலகத்திற்கு அயலில் உள்ளவர்களிடம் கடனாகப் பெற்ற ஒரு சில தளபாடங்களை இவர்கள் பயன்படுத்தி வருகின்றனர். ''மேற்படி நிர்வாக பரவலாக்கல் திட்டத்தை நடைமுறைப் படுத்துபவர்கள் அதற்கான ஊழியர்களை நியமிக்க முன்னர் அவர்களது பயன்பாட்டுக்காகத் தேவையானதளபாடங்களை அனுப்பி வைக்க வேண்டும்'' இது திரு. சிறினிவாசனின் மற்றுமொரு கருத்து.

மேலும் சில திணைக்களங்களில் இருந்து உத்தியோகத்தர்கள் நியமிக்கப்பட்ட போதிலும் அத்திணைக்களங்களது கடந்தகால ஆவணங்கள் பிரதேச செயலகத்துக்கு எடுத்து வரப்படாமையால் வேலைகளைத் தொடர்வதில் சிரமம் ஏற்பட்டுள்ளது.

திரு. கணபதிப்பிள்ளை என்பவர் நியமிக்கப்பட்டு நீண்ட நாட்கள் கடந்து சென்றுவிட்டன. எனினும் அவர் இதுவரை கடமைக்குச் சமுகமளிக்கவில்லை.

அங்கு கடமையில் இருந்த சில அதிகாரிகளுடன் உரையாடியபோது அதிகாரபரவலாக்கல் குறித்தும் தமது அதிகார வரம்புகள், நிர்வாகக்கட்டமைப்புகள் குறித்தும் தெளிவற்றநிலை இவ் அலுவலகத்தில் இருப்பதை உணர முடிந்தது.

மேற்படி நிர்வாகத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கு பிரதேச செயலாளர் அலுவலகத்தில் கடமையாற்றும் சகல தரப்பு ஊழியர்களுக்கும் புதிதாகப் பயிற்சித் திட்டங்களை நடைமுறைப் படுத்தவேண்டும் என்று இவ் அலுவலக அதிகாரிகள் சிலர் கருத்து வெளியிட்டனர்.

இவ் அலுவலகக கட்டடத்தில் போதிய இடவசதிகள் இல்லை. அத்துடன் தேவையான தளபாட வசதிகளும் காணப்படவில்லை. நிர்வாக அதிகாரியின் அலுவலக அறையிலேயே வேறொரு அதிகாரியினது அலுவலகமும் அமைந்துள்ளது. அதே அறையிலேயே நான்கு எழுது வினைஞர்களும் அமர்ந்திருந்தனர். ஒரு சிறு மேசைமீது மூன்று தட்டச்சு இயந்திரங்கள் வைக்கப்பட்டு வேலை நடைபெற்றுக் கொண்டிருந்தது. அருகில் உள்ள பாடசாலை ஒன்றில் இருந்து சில தளபாடங்கள் பெறப்பட்டு பாவிக்கப்பட்டு வருகிறது. எனினும்இருக்ககதிரைஇன்றி சிலர் நின்றவாறு கடமையாற்றுவதையும் காணமுடிந்தது. ஒரு கதிரையை அலுவலக நேரத்தின் அரைப் பகுதி ஒருவரும் மிகுதி நேரம் வேறொருவரும் பயன்படுத்தும் வழக்கம் நீண்ட நாட்களாக இங்கு உண்டு. அத்துடன் இவ் அலுவலகத்தின் கணக்குப் பகுதி சேதமடைந்த கட்டடத்தில் இயங்கி வருகிறது. மழைக்காலத்தில் ஒழுக்கு ஏற்பட்டு அலுவலக வேலைகள் ஸ்தம்பிதமடைவதுமுண்டு.

தற்போதைய நிலையில் மேற்படி இரு பிரதேச செயலகங்களினதும் முழுமையான செயற்பாடுகளுக்குத் தடையாக இருப்பது இடவசதியின்மையும் ஆளணிப் பற்றாக்குறையும் மற்றும் தளபாடத் தட்டுப்பாடும் மட்டுமல்ல, இதுவரை காலமும் அனைத்து அதிகாரங்களையும் கொண்டிருந்த அதிகாரிகள் அவற்றை பகிர்ந்தளிப்பதற்கு காட்டிவரும் தயக்கமும் மேலும் ஒரு காரணமாகும்

## அலுவலக செய்தியாளர்கள்

சுமார் 35 கிராம அலுவலர் பிரிவுகளைக் கொண்ட இப்பிரதேச செயலாளர் பிரிவில் ஒருவர் மட்டுமே நிர்வாக சேவையின் கீழ் கடமையாற்றுகிறார்.

பருத்தித்துறை பிரதேச செயலகத்துக்குள் நுழைந்த சமயம் பிரதேச செயலாளர் திரு. சிவசாமியின் அலுவலக இருக்கை காலியாக காணப்பட்டது. வாரத்தில் மூன்று நாட்கள் மட்டுமே அவர் இவ் அலுவலகத்தில் கடமையாற்றுவதாகவும், மிகுதி நாட்களில் சமநலசேவைத் திணைக்களத்தில் கடமையாற்றுவதாகவும் இவ் அலுவலக அதிகாரி ஒருவர் கூறினார்.

மேற்படி அலுவலகத்துக்கான நிர்வாக அதிகாரியாக

# இரட்டைச் சூட்டடுப்பு கிளிநொச்சியில் அறிமுகம்

காட்டுவளம் அழிவதனைத் தடுக்கும் நோக்குடன் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தினால் இரட்டைச் சூட்டடுப்பு கிளிநொச்சிக் கோட்டத்தில் அறிமுகப்படுத்தப்பட்டு வருகிறது. இதற்காக கிராமிய உற்பத்திக் குழுக்கள்தோறும் கருத்தரங்குகள நடாத்தப்பட்டு வருகின்றன. இக்கலந்துரையாடல்களில் பொது மக்களும், கிராமிய உற்பத்திக்குழு உறுப்பினர்களும் பொது நிறுவனப் பிரதிநிதிகளும் ஆர்வத்துடன் கலந்து கொள்கின்றனர்.

இக்கலந்துரையாடல்களின் மூலம் மக்களிடமிருந்து அடுப்புக் கட்டிக் கொள்வதற்கான விண்ணப்பங்கள் கிடைத்துவருவதாகவும் இது

## நாடகப்போட்டி நடாத்தப்படவுள்ளது

(குருநகர்)

யாழ்- திருமறைக் கலாமன்றம் நாடகம், நாட்டுக் கூத்து, இசை நாடகப் பிரதிப் போட்டிகளை நடத்துகிறது.

கிறிஸ்தவ வாழ்வை புதுப்பிப்பது சம்பந்தமான மையப் பொருளை வைத்து ஒரு மணி நேர நாடகங்களை போட்டிக்கு எவரும் சமர்ப்பிக்கலாம்.

ஒவ்வொரு துறைக்கும்

## ''தமிழியல் விழா''

(யாழ்ப்பாணம்)

அமுதசுரபி கலா மன்றம் நடாத்தும் 'தமிழியல் விழா' 28-ம்திகதி வெள்ளிக்கிழமை, 29-ம் திகதி சனிக்கிழமை இரு நாட்களும் புத்தூர் ஸ்ரீ சோமாஸ்கந்த கல்லூரியில நடைபெறும். முதலாம் நாள் நிகழ்வுகள் மன்றக் காப்பாளர் திரு சி. சிவனேசன் தலைமையிலும், இரண்டாம் நாள் நிகழ்வுகள் மன்றத் தலைவர் திரு. எஸ். கே. சண்முகலிங்கம் தலைமையிலும் நடைபெறவுள்ளன. யாழ். பல்கலைக்கழகதமிழ்த் துறைத் தலைவர் பேராசிரியர் திரு. அ. சண்முகதாஸ்' தமிழ்த்துறை சிரேஷ்ட விரி

# பாகிஸ்தான் மீது இந்தியா வன்மையான கண்டனம்

இருதரப்பு பிரச்சினைகளைத் தீர்க்க புதுடில்லி தெரிவித்திருந்த ஆறு அம்ச யோசனைகளை தீவிரமாகப் பரிசீலிக்கவில்லையென இந்தியா பாகிஸ்தான்மீது வன்மையாக குற்றம் சாட்டியுள்ளது.

இந்த யோசனைகள் தொடர்பாக இஸ்லாமாபாத்திலிருந்து உத்தியோகபூர்வ பதிலேதும் தெரிவிக்கப்படாத போதும் பத்திரிகைகளில் வெளியான பாகிஸ்தான் வெளியுறவு அமைச்சரின் அறிக்கை இந்தயோசனைகள் நிராகரிக்கப்பட்டிருப்பதையே காட்டுவதாகபுதுடில்லிகருத்து வெளியிட்டுள்ளது.

வெளியுறவு அமைச்சின் மூத்த அதிகாரி ஒருவர் இது குறித்து மேலும் கூறுகையில் உண்மையிலேயே சமாதானத்தையும், பேச்சு நடாத்துவதையும் பாகிஸ்தான் விரும்பினால் கட்டுப்பாட்டு எல்லைக் கோட்டு பகுதியில்அமைதியை பராமரிப்பது உட்பட இந்த யோசனைகளுக்கு எதிர்ப்பு தெரிவிக்கவேண்டிய அவசியம் இல்லை எனவும்தெரிவித்தார்

# எல்லை மாநில கிளர்ச்சி

சிறிலங்கா அரசாங்கம் இனப்பிரச்சினை தொடர்பாக குழப்பமான ஒரு நிலைப்பாட்டைக் கொண்டுள்ளது. அதாவது, ஒருவேளையில் இலங்கையில் இனப்பிரச்சினை இல்லை; பயங்கரவாதப் பிரச்சினையே உள்ளது எனக் கூறும் அரசாங்கம், வேறொரு சமயம் அரசியற்தீர்விற்கு அரசாங்கம் எப்பொழுதும் தயாராகவே உள்ளது எனக் கூறுகின்றது. இதேவேளை, வடக்கு - கிழக்கில்உள்ள பிரச்சினைக்கு இராணுவத்தீர்வே ஒரேவழி என கூறிக்கொண்டு இராணுவத்தைப் பலப்படுத்தி வரும் அரசாங்கம், இருந்தாற்போல விடுதலைப் [illegible]பிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தத் தயாராகவுள்ள[illegible]ாகக் கூறி, அதற்கு நிபந்தனைகளையும் விதித்துள்ள[illegible].

ஆனால், கடந்தகால அனுபவங்க[illegible]ளயும், சிறிலங்கா அரசின் தற்கால நடவடிக்கைகளையும் கொண்டு பார்க்கும்போது பிரதமர் ரணில் விக்கிரமசிங்கா விதித்துள்ள நிபந்தனையானது, போர்க் கைதிகளை விடுவிப்பதற்கான தந்திரமாகவே கருத இடமுண்டு. ஏனெனில், அரசாங்கம் யுத்தத்தில் காட்டும் ஆர்வம் சமாதானத்தில் இல்லை என்பது பலரின் கணிப்பீடாகும்.

ஆனால், சிறிலங்கா அரசாங்கத்திற்கு இன்று உள்ள பிரதான நெருக்கடிகளில் ஒன்று புலிகளின் கைகளில் உள்ள யுத்தக் கைதிகள் தொடர்பான விடயமாகும். இவ்விவகாரத்தில் அரசாங்கம் அக்கறை இல்லை என பலத்த கண்டனம் தென்னிலங்கையில் நிலவுகின்றது. எதிர்வரும் தேர்தலில் இவ்விவகாரமும் ஒரு முக்கியமான பிரச்சினையாக எடுக்கப்படலாம். இந்நிலையில் அரசாங்கம் இவ்விவகாரத்தில் அக்கறை காட்டுவதாகக் காட்டிக் கொள்ள வேண்டிய கட்டாய நிலையில்உள்ளது.

ஆகையினால், சமாதான சூழ்நிலையை உருவாக்குவதற்கு யுத்தக் கைதிகள் விடுதலை செய்யப்பட வேண்டும் என்ற கோரிக்கையானது, தனக்குள்ள நெருக்கடி ஒன்றை அரசாங்கம் தந்திரமானமுறையில் விடுவித்துக் கொள்ள எடுக்கும் முயற்சியாகவே தமிழ் மக்களினாலும், விடுதலைப் புலிகள் இயக்கத்தினாலும் நோக்கப்படும் வாய்ப்பு உண்டு, இதில் தவறு ஏதும் இருப்பதாகவும் இல்லை.

இந்நிலையில், நியாயப்படுத்த முடியாததும் தந்திரமானதொரு கோரிக்கையையும் முன்வைப்பதினால் சமாதான சூழ்நிலை ஒன்று உருவாவதற்கு உதவக்கூடியதா என்பது கேள்விக்குரியதே. ஆகையினால், சமாதான சூழ்நிலையை உருவாக்குவதற்கான நடவடிக்கைகளையும்,தெளிவானகொள்கைகளையும் அரசாங்கமே வெளியிடவேண்டும். அதுவே சமாதான சூழ்நிலையைஉருவாக்க வழியாகும்.

---

நேர நாடகங்களை போட்டிக்கு எவரும் சமர்ப்பிக்கலாம்.

ஒவ்வொரு துறைக்கும் ஒவ்வொரு பரிசு வழங்கப்படும். இசை நாடகத்திற்கு மூவாயிரமும், மற்றிரு நாடகங்களுக்கும் இரண்டாயிரம் ரூபாவும் பரிசாக வழங்கப்படுமென அறிவிக்கப்பட்டுள்ளது. (21)

---

புக் கட்டிக் கொள்வதற்கான விண்ணப்பங்கள் கிடைத்துவருவதாகவும் இதுவரை ஏறக்குறைய 117 அடுப்புகள் கட்டிக் கொடுக்கப்பட்டுள்ளதாகவும் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தின் சக்திப்பகுதி தெரிவிக்கின்றது.

---

ரியர் திரு. அ. சண்முகதாஸ்' தமிழ்த்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் திரு. எஸ். சிவலிங்கராஜா ஆகியோர் இந்நிகழ்வுகளில் பிரதம விருந்தினர்களாக கலந்து கொள்வார்கள். கலை நிகழ்ச்சிகள் இடம்பெறும்.

# வடக்கு-கிழக்கின் இன்றைய நிலைக்கு ஜே. ஆரின் ஆட்சியே பொறுப்பு

**-விஜயவிக்கிரமரத்ன**

(கொழும்பு)

வடக்கு, கிழக்குபிரச்சினையை சிக்கலாக்கியதற்கும் இன்றைய நிலையை இப் பிரச்சினை எட்டுவதற்கும் காரணகர்த்தா முன்னாள் ஜனாதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தனாவே. எனவே அவர்தான் இப்பிரச்சினைக்கான முழுப் பங்கையும் ஏற்கவேண்டும். வடக்கு-கிழக்கு பிரச்சினை இன்று யாராலும் எந்தவிதத்திலும் தீர்க்கமுடியாத கட்டத்தை அடைந்துவிட்டது. இவ்வாறு மத்திய மாகாண எதிர்க்கட்சித் தலைவர் விஜயவிக்கிரமரத்ன தெரிவித்துள்ளார்.

மத்தியமாகாணத்தில்நடைபெற்ற கூட்டத்தில் மேற்படி கருத்தைத் தெரிவித்த அவர் மேலும் கூறுகையில், வடக்கு கிழக்கு பிரச்சினை தொடர்பாகபேசுவதற்குமுன்பாக எமது நிலைமையை நாம் உணர வேண்டும். இன்று இந்த அளவுக்கு நாடு தீப்பற்றி எரிவதற்குக்காரணம் ஜே ஆரின் ஆட்சி தான். எனவே அவர் இந்தக் குற்றச்சாட்டிலிருந்து தப்பிக்க முடியாது

# பல்கலை. மாணவர்களுக்கு விடுதி வசதி செய்யப்படும்

**-அநுரா பண்டாரநாயக்கா**

(கொழும்பு)

சகல பல்கலைக்கழக மாணவர்களுக்கும் விடுதி வசதி அளிக்கப்பட வேண்டும் எனவும் இதற்காக வெளிநாட்டு உதவி முழுமையாகப் பெறப்பட்டு சகல பல்கலைக்கழகங்களுக்கும் வழங்கப்படும் என்று உயர்கல்வி அமைச்சர் அநுரா பண்டாரநாயக்கா கூறியுள்ளார்.

பல்கலைக்கழகங்களில் கல்வி பயிலும் 15 ஆயிரத்திற்கு மேற்பட்ட மாணவர்களுக்கும் உடனடியாக விடுதி வசதி செய்து கொடுக்கப்படும் எனவும், விடுதி வசதியின்மையால் பல்கலைக்கழக மாணவர்கள் அனுபவிக்கும் சிரமம் நிவர்த்தி செய்யப்பட வேண்டும் எனவும் பல்கலைக்கழக மாணவர் தொகைக்கேற்ப விடுதி வசதிகள் தேவையென்றும், விடுதி வசதிகளை அடிப்படையாகக் கொண்டே எதிர்காலத்தில் பல்கலைக்கழகங்களுக்கு அனுமதிக்கப்படும் மாணவர் தொகை தீர்மானிக்கப்படும் என்றும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

தற்போது பல்கலைக்கழகங்களுக்கு அனுமதிக்கப்படும் மாணவர்களில் பத்து வீதமானவர்களுக்கு மட்டுமே விடுதி வசதி இருப்பதாகவும் மிகுதி தொண்ணூறு வீதமானோரும் விடுதி வசதியின்றி மிகுந்த சஷ்டப்படுவதாகவும் தெரிவித்தார்.

இதற்கான உதவியைப் பெறும் பொருட்டு ஜப்பான், அமெரிக்கா, சீனா ஆகிய நாடுகளிடம் உதவி பெறப்படுவது தொடர்பாக பேச்சுக்கள் நடைபெறுவதாக அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

## ஜனவரி. முதல் நீக்கம்

கல்வித் திணைக்களத்தில் இதுவரை இருந்து வந்த கொத்தணி முறை 1-1-94-ம் ஆண்டு முதல் நிறுத்தப்பட்டுள்ளது. இது பற்றிய சுற்று நிருபம் ஒன்று கல்வித் திணைக்களத்திற்கு கொழும்பில் இருந்து அனுப்பப்பட்டுள்ளது

கோட்ட மட்டத்திலே கூடுதல் அதிகாரங்கள் கொடுக்கப்பட்டு கொத்தணியின் கீழ் இருந்து வந்த அதிகாரம் கோட்ட மட்ட அதிகாரிகளினால் செயற்படுத்தப்படவுள்ளது. (யோ)

# எல்லை மாநில் கிளர்ச்சி பாக். பங்களா கூட்டுச் சதி

**- முரளி மனோகர் ஜோசி**

(சென்னை)

பாகிஸ்தானும், பங்களா தேசும் கூட்டுச்சேர்ந்து இந்தியாவின் எல்லைப்புற மாநிலங்களான வட கிழக்கு மாநிலங்களில் கிளர்ச்சிகளை ஊக்குவிக்கும் வகையில் செயற்படுகின்றன என்று பாரதீய ஜனதாக் கட்சியின் மூத்த தலைவர்களில் ஒருவரான முரளிமனோகர் ஜோசி கூறியுள்ளார்.

சென்னையில் செய்தியாளர்கள் மத்தியில் பேசிய அவர் மேலும் குறிப்பிடுகையில், இந்த செயற்பாடுகளால் காஷ்மீரில் தோன்றியிருப்பது போன்ற நிலைமை வட கிழக்கு மாநிலப் பகுதியில் தோன்றலாம் எனக் குறிப்பிட்டார்.

தமிழ்நாடு சட்டமன்ற முதலமைச்சரே பல்கலைக்கழகங்களின் வேந்தராக இருக்கவேண்டும் என்று தீர்மானம் நிறைவேற்றியிருப்பது பற்றி கருத்து வெளியிடுகையில் அது நல்லதல்ல எனத் தெரிவித்தார்.

# ஜி-7 நாடுகள் ரஷ்யாவிற்கு உதவ முன்வர வேண்டும்

## மேற்கு ஜேர்மனி கோரிக்கை

(டாவோஸ்)

ரஷ்யாவின் பொருளாதார சீர்திருத்தங்களுக்கும், ஜி-7 எனப்படும் தொழில் வளர்ச்சி அடைந்த நாடுகளின் அமைப்பில் ரஷ்யா நிரந்தர இடம் பெறுவதற்கும் மேற்கு நாடுகள் உதவ வேண்டும் என்று ஜேர்மன் அதிபர் ஹெல்மட் கோல் வலியுறுத்தியுள்ளார்.

சுவிட்சர்லாந்திலுள்ள டாவோஸ் நகரில் உலக பொருளாதார மன்றத்தின் கூட்டத்தொடரை தொடக்கி வைத்துப் பேசுகையிலேயே அவர் இதனை தெரிவித்தார்.

## பேச்சு நடத்த இணக்கம்

(ஜோகானஸ்பர்க்)

தென்னாபிரிக்காவில் நடைபெறவிருக்கும் தேர்தல்களில் வலதுசாரி தீவிரவாத அமைப்புகளை போட்டியிட வைக்கும் முயற்சியில் ஈடுபட அரசியல் கட்சிகள் மீண்டும் இணக்கம் தெரிவித்துள்ளன. வலதுசாரி சுதந்திர கூட்டணி தென் ஆபிரிக்க அரசுடனும், ஆபிரிக்க தேசிய காங்கிரசுடனும் நடத்தப்பட்ட பேச்சுக்கள் வெற்றியளிக்கவில்லை எனக் கூறியுள்ள போதும் கூட தொடர்ந்தும் பேச்சு நடத்த இணக்கம் காணப்பட்டுள்ளது.

## அமெரிக்க முடிவுக்கு சீனா கண்டனம்

(பீகிங்)

தென் கொரியாவுக்கு அமெரிக்கா பற்றியாட் ஏவுகணைகளை வழங்குவது தொடர்பாக எடுத்த தீர்மானத்தை சீனா கண்டித்துள்ளது; அமெரிக்காவின் இந்த நடவடிக்கையால் கொரிய தீபகற்பத்தில் அமைதி ஏற்படாது எனவும் சீனா மேலும் கூறியுள்ளது.

உள்வந்த வெளிச்சென்ற
வாகன இலக்கங்கள்
28-01-1994

எமது பதிவில் உள்ள கடைசி இலக்கம்: 467

வடபகுதிக்கு உள்ளேவந்த வாகன இலக்கங்கள்:

27-5121, 22-7271, 24-6699, 26-2421, 26-3177
41-9652, 26-3893;

வடபகுதிக்கு வெளியேசென்ற வாகன இலக்கங்கள்:

42-0962, 28-1636, 26-5725, 24-9753, 42-2432
26-5846, 26-6077, 28-9186, 24-3258, 26-7390
27-8754, 27-7750, 27-0991, 27-5863, 26-8419,
26-1376, 24-0915, 24-2680, 28-2345, 27-9136,



வெளிவந்துவிட்டது

அரசறிவியல்-1

G. A. Q. (பரீட்சை வழிகாட்டி)

பேராதனை யாழ்ப்பாணம்

பல்கலைக் கழக பாடத்திட்டத்திற்கு அமைய தொகுக்கப்பட்டுள்ளது.

ஆசிரியர் க. செல்வரத்தினம் B. A. (Hons)

கிடைக்குமிடம்:
பட்டப்படிப்புகள் கல்லூரி, யாழ்ப்பாணம்
பூபாலசிங்கம் புத்தகசாலை, யாழ்ப்பாணம்

(கி-8476)



தலைமைத்துவ கருத்தரங்கு

நாள்:- 04-02-94
நேரம்;- காலை 9.00 — மாலை 4.00
இடம்:- கல்வாரி பூரண சுவிசேஷ ஊழியங்கள்,
89 பிறவுண் வீதி,
கொக்குவில்.

வீட்டுக்கூட்ட ஊழியங்களில் ஈடுபட்டிருக்கும்ஊழியர்கள் யாவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

03-02-94 இற்கு முன் உங்கள் விண்ணப்பங்களை மதிய உணவு கட்டணமாக ரூபா 25 உடன் மேற்குறிப்பிட்ட விலாசத்திற்கு எமக்கு அனுப்பி வைக்கவும்.

நன்றி

சபைமேய்ப்பன்
எல். ஜே. மத்தியூஸ்

(7357)



இப்பொழுதுகாண்பிக்கப்படுகிறது

யாழ். ஸ்ரீதர் திரையில்

கப்பலோட்டிய தமிழன்


இந்தியா-சிறிலங்காவிற்கிடையே

# மீனவர் பிரச்சினை ஆராய உயர் அதிகாரிகள் குழு

(டில்லி)

இந்தியாவுக்கும் சிறிலங்காவிற்கும் இடையே கள்ளக்கடத்தல் தடுப்பு மற்றும் மீனவர்கள் பிரச்சினை தொடர்பாகஆராய வீரசேகர தலைமையிலான ஒன்பது உயர் அதிகாரிகளின் தூதுக்குழுவொன்று நேற்று புதுடில்லி சென்றுள்ளது. கடற்படை மற்றும் மீன்பிடி இலாக்காக்களை சேர்ந்த இவ் உயர் அதிகாரிகள் சிறிலங்கா சுங்கத்துறை தலைமை அதிகாரி வீரசேகர தலைமையில் சென்றுள்ளனர். எதிர்வரும் திங்கள் மற்றும் செவ்வாய் கிழமைகளில்இந்திய அதிகாரிகளுடன்பேச்சுவார்த்தைநடத்தவுள்ளனர்;

போதைப் பொருள் கடத்தல், மீன்பிடி வள்ளங்கள் கடத்தலுக்கு பயன்படுத்தல், இரு நாடுகளிடையே ஆட்களும் அகதிகளும் நடமாடுவது, கடவுச்சீட்டு துஷ்பிரயோகம் போன்றவை பேச்சுகளில் முக்கியமாக பரிசீலிக்கப்படும் எனத் தெரிவிக்கப்படுகிறது. இரு நாடுகளிடையிலான இத்தகைய பேச்சுகள் 11ஆவது தடவையாக நடைபெறுகிறது.

சிறிலங்கா தூதுக்குழுவில் நாணயக் கட்டுப்பாட்டாளர் எம்.ஐ. பெர்னான்டோ, கி.ஐ. டி பிரிவு பணிப்பாளர் பி.வி. செனிவிரட்ன, நிதிய மைச்சின் சிரேஷ்ட உதவிச் செயலர் உட்படபல சிரேஷ்ட அதிகாரிகள் அடங்குகின்றனர்.

# ஆங்கில உதவி ஆசிரியர் விண்ணப்பங்கள் கோரல்

(யாழ்ப்பாணம்)

மாவட்ட சேவைத் திட்டத்தின் கீழ் ஆங்கில உதவி ஆசிரியர்களுக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. இப் பதவிக்கான ஆட்சேர்ப்பு போட்டிப் பரீட்சை ஏப்ரல் மாதத்தில் நடைபெறும்.

க. பொ. த. பரீட்சையில் இரண்டுக்கு மேற்படாத அமர்வுகளில் மூன்று திறமை சித்திகளுடன் தமிழ்மொழி உட்பட ஆறு பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும். ஆங்கில மொழியில் திறமை சித்தியும் கொண்டவர்கள் இதற்காக விண்ணப்பிக்க முடியும்.

உரிய முறையில் நிரப்பப்பட்ட விண்ணப்பப்படிவங்கள் பெப்ரவரி 14ஆம் திகதிக்கு முன்பாக பரீட்சை ஆணையாளருக்கு பதிவுத் தபாலில் அனுப்பிவைக்கப்பட வேண்டும்.

இது குறித்த வர்த்தமானி அறிவுறுத்தலையும் விண்ணப்பப் படிவத்தையும் ஈழநாதம் அலுவலகத்தில் பார்வையிடலாம். (சி)

# அரசபணி தாய்மாருக்கு 2வருட பிரசவ விடுமுறை

(கொழும்பு)

அரச பணியில் உள்ள தாய்மார்களுக்கு இரு வருட மகப்பேற்று லீவு வழங்கும் சாத்தியம் குறித்து ஆராயப்படுகின்றது. இதற்கான அமைச்சரவை அங்கீகாரம் பெறப்படும் என சுகாதார மகளிர் விவகாரத்துறை அமைச்சர் ரேணுகா ஹேரத் தெரிவித்துள்ளார்.

தற்சமயம் சம்பளத்துடனான 84 நாட்கள் மகப்பேறு லீவு மட்டும் வழங்கப்படுகிறது. புதிய திட்டத்தின்படி இக் காலப்பகுதிக்கு சம்பளத்துடனான லீவும் மேலதிகமாக இரு வருடங்களுக்கு சம்பளமற்ற லீவும் வழங்கப்படும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

## பொதுசன உதவிப்பணம்

வலிகாமம் வடக்குப் பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட மாதாந்த பொதுசன உதவிப்பணம் 1993-ம் ஆண்டு சித்திரை மாதத்திலிருந்து குறைத்து வழங்கப்பட்டவர்களுக்கான நிலுவைப் பணம் முழுமையாக நேற்று முதல் தொடர்ந்து ஒரு கிழமைக்கு மல்லாகம் பிரதேச செயலகத்தில் வைத்து வழங்கப்பட்டு வருகிறது.

## வல்வெட்டித்துறை

பகுதியினுள்ளும் பீரங்கிகள், ஷெல்கள் விழுந்து வெடித்தன இச்சம்பவம் நேற்று முன்

## உதைபந்தாட்டம்

யாழ். மிட்டவுன் ரோட்றக்ட் கழகம் நடாத்தும் உதைபந்தாட்ட சுற்றுப் போட்டி இன்று மாலை 3 மணிக்கு பாசையூர் சென். அன்ரனீஸ் மைதானத்தில் நடைபெறும். சென். அன்ரனீஸ் விளையாட்டு கழகத்தை எதிர்த்து சென். நீக்கலாசும், பாடும் மீனை எதிர்த்து ஸ்கந்தா விளையாட்டுக் கழகமும் மோதுகின்றன.

## பரீட்சை நிலையம் மாற்றம்

யா/ கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயத்தில் நாளை இடம்பெறவிருந்த கல்விக் கல்லூரிக்கான ஆட்சேர்ப்பு பரீட்சை அதே தினம் யா/ சுண்டிக்குளி பெண்கள் கல்லூரியில் இடம்பெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

யா/ கனகரத்தினம் ம. ம. வித்தியாலயத்தில் பரீட்சை எழுத இருப்பவர்கள் யாவரும் யா/ சுண்டுக்குளி பெண்கள் கல்லூரிக்கு சமுகமளித்து பரீட்சை எழுதும்படி கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளனர்.

## பாம்பு தீண்டியது

(யாழ்ப்பாணம்)

வயலில் வேலை செய்து கொண்டிருந்தபோது பாம்பு தீண்டியது. பாம்பால் தீண்டப்பட்டவரையும் பாம்பையும் யாழ். போதனா மருத்துவ மனைக்கு வயல் உரிமையாளர் எடுத்து வந்தார்.

கைதடி பகுதியில் உள்ளவயலொன்றில் வேலை செய்து கொண்டிருந்த சாந்தா இராமலிங்கம் (வயது 19) என்பவருக்கே பாம்பு தீண்டியுள்ளது. பாம்பு தீண்டியதும் பாம்பை பிடித்து போத்தல் ஒன்றினுள் விட்டு மூடியபடி, பாம்பு தீண்டியவரையும் உடனடியாக யாழ். போதனா மருத்துவ மனைக்கு வயல் உரிமையாளர் கொண்டு வந்தார். அடுத்து உடனடியாக அவசர நோயாளர் பிரிவில் பாம்பு தீண்டியவருக்கு சிகிச்சை அளிக்கப்பட்டது. (கி)

## விடிவின்

விடுதலைப் புலிகள் கலை பண்பாட்டுக் கழகப் பொறுப்பாளர் திரு.புதுவை இரத்தினதுரை அவர்கள் வெளியீட்டுரை நிகழ்த்த மூத்த தளபதி திரு. பானு அவர்கள் ஒலிப்பதிவு நாடாவை வெளியிட யாழ். மாவட்ட அரசியற்துறை பொறுப்பாளர் திரு. இளம்பரிதி அவர்கள் பெற்றுக்கொள்வார். யாழ். மாவட்டச் சிறப்புத் தளபதி திரு. செல்வராசா அவர்களால் கலைஞர்களுக்கான

# விடுதலைப்புலிகளுடன் மகளை இணைத்த தாய்

விடுதலைப் போராட்டத்திற்காக தனது மகளை தாயார் ஒருவர் விடுதலைப் புலிகள் இயக்கத்தில் சேர்த்துள்ளார். இளவாலையில் இருந்து இடம்பெயர்ந்து மானிப்பாயில் வசிக்கும் திருமதி இரத்தினசிங்கம் என்பவரே தனது மகளை புலிகள் இயக்கத்தில் சேர்த்தார்.

இத்தாயாருக்கு இரு பிள்ளைகள் இருந்தனர். இதில் ஒருவர் மண்மீட்பு போருக்கு பங்களித்துக்கொண்டிருந்த போது மரணத்தைத் தழுவிக் கொண்டார்,

## கடலில்

பலத்த சத்தத்துடன் அப்பொருள் வெடித்ததில் சிறுவனின் வலது கையில் பெரும் காயம் ஏற்பட்டது. அருகிலிருந்த தாயாரும் காயங்களுக்குள்ளானார்.

பாடசாலை விட்டு வீட்டிற்கு வரும்போதே இப் பொருளை வாங்கி வந்ததாக தெரிவிக்கப்பட்டது.

கேரதீவு கடலில் மிதந்து வந்த இப் பொருள் பற்றி எதுவும் அறியப்படவில்லை.

சரவணபவான் கஜராஜ் (12 வயது) என்ற சிறுவனும் இவரின்தாயாருமான ச. பரமேஸ்வரி (32 வயது) என்பவருமே காயமடைந்தவர்களாவார்கள்.

இவர்கள் சாவகச்சேரி மறவன்புலவு பகுதியைச் சேர்ந்தவர்கள், காயமடைந்த சிறுவன் யாழ். வைத்தியசாலையில்அனுமதிக்கப்பட்டுள்ளார்

## கிணற்றில் வீழ்ந்து சிறுமி மரணம்

(வடமராட்சி)

கிணற்றில் குளிக்க தண்ணீர் அள்ளியபோது சிறுமி ஒருவர் தவறி விழுந்து மரணமானார். கடந்த புதனன்று இச்சம்பவம் நடைபெற்றது.

பொலிகண்டி கந்தசாமி கோவிலடியைச் சேர்ந்த சண்முகம் ஜெயதேவி (வயது 9) என்ற சிறுமியே இப் பரிதாப மரணத்தை தழுவிக்கொண்டவராவார். (யோ)


மரண அறிவித்தல்கள்

திருமதி
கெலன் செல்லம்மா சீமாம்பிள்ளை

இவர் காலஞ்சென்ற திரு. சூசைப்பிள்ளை சீமாம்பிள்ளையின் அன்பு மனைவியும், திருமதி மேரி அக்னேஸ் நவரட்ணம் (லண்டன்), அருட்திரு எஸ். ஜே. இம்மானுவல் (குரு முதல்வர், யாழ்ப்பாணம்), திரு. எஸ். எவ். சேவியர் (ஆசிரியர், சம்பத்திரிசியார் கல்லூரி), திருமதி மேரி ஆன் தம்பிரட்ணம் (ஆசிரியை, சம்பத்திரிசியார் கல்லூரி) ஆகியோரின் அன்புத் தாயாரும், திரு. வி. நவரட்ணம், காலஞ்சென்ற வேஜினி சேவியர், காலஞ்சென்ற தம்பிரட்ணம் ஆகியோரின் மாமியும், திருமதி யூடி யேதீஸ்வரன் (லண்டன்), Dr. திருமதி சித்றோ அன்ரன், திருமதி பேணி றஞ்சன் (ஜேர்மனி), செல்வி செறீன் (கனடா), செல்வி அனிற்றா ஆகியோரின் பேர்த்தியும், யொனதன், பிரதீபன், பற்றிக் ஜெசினா ஆகியோரின் பூட்டியுமாவார். இவரின் நல்லடக்க திருப்பலி விருந்து சனிக்கிழமை (29-01-94) இன்று மாலை 4-00 மணிக்கு யாழ்ப்பாண புனித மரியாள் பேராலயத்தில் நடைபெறும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
53, கத்தோலிக்க அச்சக ஒழுங்கை, யாழ்ப்பாணம்.
அருட்திரு. எஸ். ஜே இம்மானுவல். புனித சவேரியார் குருத்துவக் கல்லூரி கொழும்புத்துறை.
(7358)

சிற்றம்பலம் சின்னத்தம்பி
(இளைப்பாறிய ஆசிரியர் நெல்லியடி மத்திய

தினசரி பி. ப. 3-00 மணி மாலை
6-00 மணி
சனி, ஞாயிறு காலை 10-00 மணி
(7363) பி. ப. 3-00 மணி 6-00 மணி

## விலை குறைப்பு

22-1-94 அன்று தொடக்கம் தொடர்ந்து நாவாந்துறை சந்தை மாட்டிறைச்சிக் கடையில் 1 கிலோ இறைச்சி ரூபா 80/- வீதம் விற்கப்படுகின்றது.

தகவல்:
நாவாந்துறை மாட்டிறைச்சிக்கடை
உரிமையாளர்கள்
(7361)

## மாருதி வீடியோ விஷன்

### எமது புதிய வெளியீடுகள்

மணிரத்னத்தின்:-

- திருடா திருடா — பிரசாந் - ஆனந்த், ஹீரா - அனுசுகர்வால்
- ராஜகுமாரன் — பிரபு - மீனா - நதியா
- லட்சியம் — விஜயசாந்தி - விஜயகுமார்
- அமைதிப்படை — சத்தியராஜ் (இரு வேடம்) ரஞ்சிதா - கஸ்தூரி
- தாயும் மகளும் — சரிதா
- இராவணன் — மன்சூர் அலிகான் அஹானா

புதிய படங்கள் உடன் பதிவு செய்து தரப்படும்.
புதிய பாடல்கள் CD (கொம்பக்ட் டிஸ்க்கில்) இலிருந்து பதிவு செய்து தரப்படும்.

பரமேஸ்வரா சந்தி, திருநெல்வேலி.
(சி-8475)

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 31ஆம் இலக்கத்திலுள்ள ஈழநாதம் பணிமனையில் 1994 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 29ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

வருகிறது.

பெறத் தகுதியுடையவர்கள் தங்களின் நிலுவைகளை உடன் பெற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

அத்துடன் மார்கழி மாதத்திலிருந்து புதிதாக சேர்த்துக் கொள்ளப்பட்டவர்களுக்கான பொதுசன மாதாந்த உதவிப்பணக் கொடுப்பனவும் வழங்கப்பட்டுவருகிறதுஎனவே குடும்பஅட்டை, அடையாள அட்டை என்பவற்றினை தவறாது கொண்டு வருதல் வேண்டும் என பிரதேச செயலர் கேட்டுக்கொள்கின்றார்.

### வடக்கு

நிலையில் அவர்களினால் தீவிரவாதபோக்கை கைவிட முடியாத ஒரு நிலைஏற்படும்

எனவே இது தேசிய பிரச்சினை என்பதை நான் ஏற்றுக்கொள்கின்றேன்.

பிரச்சினைக்குத் தீர்வு காணுவது தொடர்பாக இன்னும் மிஞ்சியுள்ள சிறந்த திட்டம் 1987ல் ஏற்பட்ட இலங்கை-இந்திய ஒப்பந்தமாகும்.

இது சிறுபான்மையினரின் பிரச்சினையாகக் கருதும் வேலைவாய்ப்பு மற்றும் தமிழர் பாரம்பரிய பிரதேசம் போன்றவற்றில் அதிகாரப் பரவலாக்கம் போன்ற பிரச்சினைகள் தீர்க்கப்பட வேண்டும் என்பதற்காக உருவாக்கப்பட்டதாகும் என்றார்.

### புலிகளுடன்

சபை தலைவர் அல்பிரட் அலெக்ஸ்சாண்டர்தமதுநான்குநாள் விஜயத்தை முடித்துக் கொண்டு நேற்று மாலை 4 மணிக்கு கொழும்பு புறப்பட்டனர்.

### பாதுகாப்பு

செஞ்சிலுவைச் சங்க யாழ். வதிவிடப் பிரதிநிதி செற்றிக் பிரதா சேதமடைந்தவீட்டை நேற்றுக்காலை பார்வையிட்டார்.

ஷெல்கள் விழுந்து வெடித்தன

இச்சம்பவம் நேற்று முன்தினம் இரவு 9-15 மணியளவில் நடைபெற்றது. கட்டைக்காடு பகுதியில் இருந்து காங்கேசன்துறை நோக்கிச் சென்று கொண்டிருந்த 'டோறா' நீருந்து விசைப் படகிலிருந்து ஏவப்பட்டபீரங்கிகளும் ஷெல்களும் மாறி மாறி குடியிருப்புகளில் வந்து விழுந்தன.

வல்வெட்டித்துறை கம்பர் மலையைச் சேர்ந்த இராசதுரை சோமசுந்தரம் (வயது 65) என்பவரே அதிர்ச்சியால் மரணமடைந்தவராவார். மற்றும் வீட்டில் நித்திரை செய்து கொண்டிருந்த உடுப்பிட்டியைச் சேர்ந்த வல்லிபுரம் கந்தசாமி (வயது 56) காயமடைந்தார். இவரருகில் விழுந்து வெடித்த சன்னங்கள் இவரது கன்னத்தில் காயத்தை ஏற்படுத்தியது. வல்வெட்டித்துறையில் இருந்து தாக்கியபோது இவர் காயமடைந்தார்.

சுன்னாகம் பல நோக்குக் கூட்டுறவுச் சங்க லொறியில் கிளினராக பணிபுரியும் சுன்னாகத்தைச் சேர்ந்த கணபதிப்பிள்ளை சந்திரன் (வயது 32) என்பவரும் காலில் காயமடைந்தார். இவர் பருத்தித்துறை இறங்குதுறையில் பொருள்களை ஏற்றுவதற்காக வந்து தங்கியிருந்த போது காயமடைந்தார். துறைமுகத்தில் விழுந்து வெடித்த ஷெல் ஒன்றுக்கே இவர் காயமடைய நேர்ந்தது. எனினும் அருகில் இருந்தோர் மயிரிழையில்தப்பிக்கொண்டனர், இவர் பருத்தித்துறை கடற்பரப்பில் வைத்து கடற்படையினர் தாக்கியபோது காயமடைந்தவராவார். மேற்குறித்த இருவரும் பருத்தித்துறை அரசினர் வைத்தியசாலைக்கு அவசர சிகிச்சைக்காக எடுத்துச் செல்லப்பட்டனர்.

வல்வெட்டித்துறையில் நடந்த தாக்குதலின்போது பரமகுரு பாமினி (வயது 17) என்ற யுவதியும் காயமடைய நேர்ந்தது. இவர் வீட்டில்

ளால் கலைஞர்களுக்கான கௌரவிப்பு நடந்த பின்னர் கவிஞர் இ. முருகையன். திருமதி க. சிதம்பரநாதன், பிரம்மஸ்ரீ வீரமணிஐயர் ஆகியோர் மதிப்பீட்டுரைகளை ஆற்றுவர்.

பதிலுரையை இந்த ஒலிப்பதிவு நாடாவின் இசையமைப்பாளர் மார்ஷல் அவர்கள் நிகழ்த்துவார். விழாவின் இறுதியில்சிறப்பு நிகழ்ச்சியாக தமிழீழ இசைக் குழுவின் இசைத் தென்றல்' இசை நிகழ்ச்சி நடைபெறும்.

### அரச

தாக தெரிவிக்கப்படுகிறது. இதன் பின்பே அரசு நிதியுதவி தொடர்பாக ஐ. எம். எவ். முடிவு எடுக்கும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

நித்திரையில் இருந்த போது இவரது வீட்டைச்சேதப்படுத்திய குண்டு இவரது காலைப் பதம் பார்த்தது. இவர் வல்வெட்டித்துறை அரசினர் வைத்தியசாலைக்கு சிகிச்சைக்காக எடுத்துச் செல்லப்பட்டார். இவரது வீட்டின் கூரைப் பகுதியும் அருகில் உள்ள சிவன் கோயில் கூரைப் பகுதியும் சேதமடைந்தன.

மற்றும் முனைப்பகுதியில் பல தென்னை மரங்கள் முறிந்தன. சுவர்கள், மதில்கள் சேதமடைந்தன. கம்பர்மலையில் இரண்டு வீடுகள் சேதமடைந்தன.

கடற்படையினர் ஏவிய பீரங்கி ஷெல் குண்டுகள் குடியிருப்புகளுக்கு மேலாக தீச்சுவாலைகளுடன் சென்று வெடித்து சிதறியது. வீதியில் காணப்பட்டவெளிச்சங்களை இலக்கு வைத்துத் தாக்கியதாகவும் சொல்லப்படுகிறது.

நேற்று காலை 9-30 மணியளவிலும் சிறிலங்கா கடற்படையினர் மேற்படி கடற்பரப்பில் ரோந்து சென்றதாகவும் எமது வடமராட்சி செய்தியாளர் ஸ்தலத்தில் இருந்து தெரிவிக்கிறார்.

(யோ)

(இளைப்பாறிய ஆசிரியர் நெல்லியடி மத்திய மகாவித்தியாலயம்)

கரவெட்டியைச் சேர்ந்த சி. சின்னத்தம்பி 26-1-94 அன்று யாழ்ப்பாணத்தில் காலமாகிவிட்டார். அன்னார் இளைப்பாறிய ஆசிரியை சி. காசிப்பிள்ளையின் அன்புக் கணவரும், கதிர்மகள், சிவசிதம்பரம் (ராசா), சர்வேஸ்வரன் (ஈசன்) ஆகியோரின் தந்தையும், காலஞ்சென்ற சிதம்பரப்பிள்ளை, பொன்னம்பலம் (இளைப்பாறிய, சுகாதார கல்வி அதிகாரி), காலஞ்சென்றவர்களான பார்வதி, கனகசபை (ஓவசியர்) ஆகியோரின் சகோதரரும், பாலேந்திரா (சட்டத்தரணி), நிர்மலா, கேமா ஆகியோரின் மாமனாரும், முகுந்தன் (City University in London), சிவதர்சினி (உடுவில் கல்லூரி பழைய மாணவி), பிரியதர்சினி (சுண்டிக்குளி மகளிர் கல்லூரி), காயத்திரிஆகியோரின் பாசமிகு பேரனுமாவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் 114ராசாவின் தோட்ட வீதியில் உள்ள இல்லத்தில் சனிக்கிழமை (இன்று) காலை 10 மணிக்கு நடைபெற்று கோம்பையன் மணல் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக் கொள்கிறேன்.

தகவல்:
திருமதி சி. காசிப்பிள்ளை
(மனைவி)
(7359)

## திருமதி புவனேஸ்வரி சரவணபவன்

கொல்லங்கலட்டியை பிறப்பிடமாகக் கொண்டவரும், தற்போது யாழ்ப்பாணத்தில் வசித்து வந்தவருமான திருமதி புவனேஸ்வரி சரவணபவன் 28-1-1994 அன்று சிவபதமடைந்தார். இவர் காலஞ்சென்ற திரு. த. சரவணபவன் (இளைப்பாறிய C.C.S. உத்தியோகத்தர்) அவர்களின் அன்பு மனைவியும், விமலராஜா (Engineer Yemen), ஜெகதீசன் (Branch Manager, Office Equipment Ltd), ஸ்ரீகணநாதன் (Ford, Rhodes Thornton & Co, Colombo) ஆகியோரின் அன்புத் தாயாரும், சகுந்தலா தேவி, இராஜேஸ்வரி, செல்வநாயகி (விரிவுரையாளர் கொழும்பு பல்கலைக் கழகம்) ஆகியோரின் அன்பு மாமியாரும் சிவசுதன் (UK), சுகர்ணா, ரூபினி, சுகந்தினி (சுண்டுக்குளி மகளிர் கல்லூரி மாணவிகள்), ரஜீவ், பிரகாஸ் (பரியோவான் கல்லூரி), சிவாகர், நிஷ்கலா ஆகியோரின் பாசமிகு பேர்த்தியுமாவார். அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று 29-01-94 காலை 9 மணிக்கு நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளிற்காக கோம்பையன்மணல் மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

தகவல்:
ச. ஜெகதீசன் (மகன்)
(7360)
184A, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.